பிள்ளைகள் தான் ஒரு வகுப்பறையில் சேர்த்துக்கொள்ள வேண்டும். நான் சொன்னது போல் 8 ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற பெண்கள் படிக்க வேண்டியிருக்கின்ற காரணத்தால் அந்த கோ-எடுகேஷன் பள்ளியில் சேர முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் தனியார் மேல்நிலைப் பள்ளிகள் இயங்குவது உண்மை தான், அந்த தனியார் பள்ளியில் தாலுக்காவில் உள்ள பெண்களும். 8 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பெண்களும் அதிகமாக இருப்பதால் அங்கே நன்கொடை பெறப்படுவதாகச் சொல்கிறார்கள். அந்த நன்கொடையைக் கொடுத்துப் படிக்கிற வசதி இருப்பவர்கள் தான் அங்கே படிக்க முடிகிறது. நன்கொடை கொடுக்க முடியாத பிள்ளைகள் வெளியே சென்று படிக்க முடியாமல் வசதி ஏதுமின்றி மேல்நிலைப் பள்ளியில் படிக்காமல் பெண்கள் அப்படியே இருந்து விடுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் அங்கே ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை பெற்று அங்கே இருக்கின்ற, பக்கத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள்—3 சட்டமன்ற தொகுதிகள் இடையில் வருகின்றன—அந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஏற்பாடு செய்து பங்குத் தொகை கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆக அரசு அடுத்த ஆண்டிலாவது நிதிநிலையை மனதில் கொண்டு கஷ்டம் இருந்தால் கூட அந்தப் பகுதியிலுள்ள மக்களுடைய கஷ்டத்தை, சிரமத்தை மனதில் கொண்டு தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டும். செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இப்படி என்னை வற்புறுத்த ஆரம்பித்தால் எல்லோருடைய கோரிக்கைகளையும் ஒரு சேர என்னால் நிறைவேற்ற முடியாது என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். நான் ஏற்கனவே சொன்ன பதிலில் என்னுடைய ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினருக்கு சொல்லியிருக்கிறேன். அந்த ஆலோசனைகளைச் சரியாக பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 263, டாக்டர் க. கோபால் இருக்கையில் இல்லை, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

263—

நன்னிலம் தலைமை மருத்துவமனைக்கு கூடுதல் வசதி.

*3277—டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 மார்ச் 19

(அ) நன்னிலம் தலைமை மருத்துவமனைக்கு அதிக நோயாளிகள் வருவதால் போதிய மருத்துவர்களும், கட்டிட வசதியும் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) சுகாதார வசதிகளும் செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நிதி வசதியைப் பொருத்தும் தேவையைப் பொருத்தும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தலைமை மருத்துவமனை தாலுக்கா மருத்துவ மனையாக இருக்கின்ற காரணத்தால் இங்கே இந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான ஆம்புலன்ஸ் வசதி இங்கே இல்லை ; இரத்த சேமிப்பு நிலையம் இல்லை; இந்த ஆஸ்பத்திரிக்குத் தேவையான மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இங்கே இல்லை. ரத்த சேமிப்பு நிலையம் இல்லாத காரணத்தினால் பல பிரசவ கேஸ்கள் ஆபத்தான நிலையில் பல்வேறு மருத்துவ மனைகளுக்குக் கொண்டுபோகப்பட்டு இறக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. பெரிய மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால் 20 கிலோ மீட்டர் தூரத்தில் திருவாரூர் ; 30 கிலோ மீட்டர் தூரத்தில் நாகப்பட்டினம்; 30 கிலோ மீட்டர் தூரத்தில் கும்பகோணம்; 30 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள மயிலாடுதுறை; ஆகிய மருத்துவமனைகள் அதிக தூரத்தில் இருப்பதால். இந்த மருத்துவமனைக்கு பல்வேறு வசதிகள் செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன் நிதிப் பிரச்சினைதான் **காரணம்** என்று. நிதி நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை **எடுக்கப்படும்**. ஏற்கெனவே 40 படுக்கைகள் அங்கே இருக்கின்றது. இருந்தாலும் உள் நோயாளிகள் கொஞ்சம் அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கேள்வியிலே கூட கட்டிட வசதி பற்றியும். மருந்துகள் ஒதுக்குவது

பற்றியும்தான் கேட்டு இருக்கிறார்கள், ஆம்புலன்ஸ் பற்றி அவர்கள் குறிப்பிடவில்லை இருந்தாலும் மொத்தமாக என்னென்ன வசதிகள் தேவை எனபதைப் பார்த்து, நிதி வசதிக்கேற்ப என்ன செய்ய முடியுமோ அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 264. திரு. என். ஆர், ராஜேந்திரன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

264—

அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்கள்,

*3788—திரு, என். ஆர். ராஜேந்திரன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவைகளில் பணியாற்றும் நிர்வாக இயக்குநர்கள் மற்றும் பொது மேலாளர்கள் எத்தனை பேர்?

(இ) நிர்வாக இயக்குநர் மற்றும் பொது மேலாளர் பதவிகளில் இட ஒதுக்கீடு முறையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் அரசுக்குச் சொந்தமாக 15 (பதினைந்து) போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன,

(ஆ) அவைகளில் மொத்தம் 15 நிர்வாக இயக்குநர்களும், 15 பொது மேலாளர்களும் உள்ளனர்.

(இ) இந்தப் பதவிகளுக்கு இட ஒதுக்கீடு முறையில் நியமனம் செய்ய விதிகளில் இடம் இல்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இட ஒதுக்கீடு என்பது எல்லாத் துறைகளிலும் இருக்கும்போது, போக்குவரத்து நிறுவனங்களில் மட்டும் ஏன் இல்லை என்பதை அறிய விரும்புகிறேன்.